# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 05.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA3227/F/2019**

திரு அ. அந்தோணி ஜேசுதாஸ் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(திருநெல்வேலி) லிட்.,
வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி - 627 003. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 02.02.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 05.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 05.04.2019 |

******

## ஆணை

இன்று (05.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு அ. அந்தோணி ஜேசுதாஸ் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு T.மோகன் செந்தில்குமார், உதவி மேலாளர் (வணிகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிட்., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 02.02.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், PRWS பென்சன் எப்போது நிறுத்தப்பட்டது என்றும், அதன் அலுவலக ஆணை நகல் வழங்கவும், PRWS பென்சனுக்காக பணிக்காலத்தில்

மாதா மாதம் தனது சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட தவணைகள் மற்றும் தொகை, PRWS பென்சனுக்காக பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை எப்போது திரும்ப வழங்கப்படும் எனவும், பென்சன் தொடர்பான சில தகவல்களை குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், மண்டல அலுவலகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி - 627 003 என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், தான் கோரிய உரிய தகவல்களை அளிக்க கேட்டும், 05.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 22.03.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். தான் கோரிய முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், முழுமையான தகவல்களை அளிக்க ஆணையிட கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 05.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை கேட்டுள்ளதாகவும், தான் கோரிய சரியான தகவல்களை பெற்று வழங்குமாறும் ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக வழங்குவதாக தெரிவித்து ஆணையத்தின் முன்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்கினார்.

6. மேல்முறையீட்டாளர் தகவல் பெற்றுக்கொண்டதாக ஆணையத்தின் முன்பு தெரிவித்ததன் அடிப்படையில், இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லை என ஆணையம் முடிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.SA3227/F/2019**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(திருநெல்வேலி) லிட்.,
வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி - 627 003.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு அ. அந்தோணி ஜேசுதாஸ்,
எண்.59, V.G.P. மர்பி நகர்,
N.G.O. காலனி,
திருநெல்வேலி - 627 007.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS-170919**